# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044—22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 474/2016

ஆணை எண்: 241/2017

நாள்: 03/10/2017

திரு. M.P. சாக்ரடீஸ்,
வழக்கறிஞர்,
10வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம். — **முறையீட்டு மனுதாரர்**

திரு. பாலமுருகன்,
முன்னாள் துணைத்தலைவர்,
சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம். — **எதிர் மனுதாரர்**

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சி, 10வது வார்டு முன்னாள் உறுப்பினர் திரு. M.P. சாக்ரடீஸ் என்பவரது 20.01.2014 நாளிட்ட முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குநரக 13.5.2016 நாளிட்ட கடிதத்துடன் 30.05.2016-ல் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 0474/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட முறையீட்டு மனு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டம், சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சி, 10வது வார்டு முன்னாள் உறுப்பினர் திரு. M.P. சாக்ரடீஸ் என்பவர் இம்முறைமன்ற நடுவ 02.06.2016 நாளிட்ட அறிவிப்பாணையில் வலியுறுத்தியும் முறையீட்டு மனுவினை 2015-ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படும்

முறைகள்) விதிகளின்படி உரிய படிவத்திலும் (ஆதார ஆவண நகல்களுடன்) மற்றும் ரூ.10/- மதிப்பிலான நீதிமன்ற வில்லையுடன் தாக்கல் செய்யவில்லை.

புகார் மனு தொடர்பாக 27.12.2016 மற்றும் 14.9.2017 ஆகிய நாட்களில் வாய்ப்புகள் அளித்தும் விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. இருப்பினும் முறையீட்டு மனு குறித்து செயல் அலுவலரது அறிக்கை / வாக்குமூலம் மற்றும் எதிர் மனுதாரரது வாக்கு மூலத்தின் நகல்கள் இம்முறைமன்ற நடுவத்தால் பெறப்பட்டுள்ளன. அவற்றின் நகல்கள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. 02.06.2016 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் தெரிவித்தவாறு விதிகளின்படி உரிய படிவத்தில் நீதிமன்ற வில்லையுடன் முறையீட்டினை தாக்கல் செய்யுமாறும், மேற்படி வாக்குமூலம்/அறிக்கையின் மீதான ஆட்சேபனை ஏதும் இருப்பின் முறையாக முறையீட்டு மனுவினை தாக்கல் செய்து கொள்ளலாமென மனுதாரருக்கு தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//--

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

(முத்திரை: தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை-600 032)

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**செயலாளர்.** 12/10

12-10-17

12/10/17

பெறுநர்
திரு. M.P. சாக்ரடீஸ்,
வழக்கறிஞர்,
10வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
சந்தரபாண்டியபுரம் பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம் - 627 858. (இணைப்புடன்)

நகல்
செயல் அலுவலர்,
சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம் – 627 858.